## கிளாம்பாக்கம் – ‘கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம்’

# நூறு சதவிகித பயன்பாட்டுடன் சிறப்புற செயல்படுகிறது!

## சட்டப்பேரவையில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு விரிவான விளக்கம்!

**சென்னை, பிப்.15– சட்டப்பேரவையில், நேற்று முன்தினம் கேள்வி நேரத்தின்போது, கிளாம்பாக்கம் – ‘கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம்’ குறித்து நடைபெற்ற விவாதத்தில் விரிவாக விளக்கமளித்த இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் மற்றும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் தலைவர் பி.கே.சேகர்பாபு, ‘‘கிளாம்பாக்கம் – ‘கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம்’ நூறு சதவிகித பயன்பாட்டுடன் சிறப்புற செயல்படுகிறது’’ எனக் குறிப்பிட்டார்.**

சட்டப்பேரவையில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேசியதாவது :

கிளம்பாக்கம் பேருந்து நிலையத்தைப் பொறுத்த வரையில், திறப்பதற்கு முன்பாக ஒரு விமர்சனமும், திறக்கப்பட்டதற்கு பின்பு ஒரு விமர்சனமும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சுருக்கமாக 2 நிமிடத்தில் அந்த வரலாறை கூற இந்த அவையில் நான் கடமைப்பட்டுள்ளேன். 2013 ஆம் ஆண்டு இந்த சட்டமன்றப் பேரவையில் கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தை அன்றைய ஆட்சி அறிவித்தது. 2013 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட அந்தத் திட்டம், 2018 ஆம் ஆண்டு tender கோரப்பட்டது. 2019 ஆம் ஆண்டு ஒப்பந்தப்புள்ளி நிறைவு செய்யப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டன. அந்த ஒப்பந்தத்தின் கால அளவு 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் முடிய வேண்டும். மார்ச் மாதத்திற்கு பிறகு, திராவிட மாடல் ஆட்சி தமிழக முதலமைச்சர் அவர்கள் தலைமையில் ஏற்பட்ட பிறகு, கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தின் ஆய்வுக் கூட்டத்தை முதலமைச்சர் அவர்கள் தலைமையிலே, அன்றைக்கு அந்தத் துறையினுடைய அமைச்சராக இருந்த முத்துசாமி அவர்கள் தலைமையில் தொடர் நடவடிக்கையாக ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டு, நிறுத்தப்பட்ட அந்தப் பணிகளை, திட்டம் எந்த ஆட்சியில் கொண்டுவரப்பட்டது என்பது முக்கியமல்ல. தொலைநோக்கு பார்வையோடு இருப்பதால், அதை விரைந்து முடிக்க வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார். இந்தத் திட்டம் அறிவிக்கப்பட்ட பிறகு 2 ½ ஆண்டுகாலம் முந்தைய ஆட்சிதான் ஆட்சிப் பொறுப்பில் இருந்தது. அறிவிக்கப்பட்டு அடிக்கல் நாட்டப்பட்டதுடன் சரி.

அப்போதைய முதலமைச்சர் அவர்கள்தான் அங்கு அடிக்கல் நாட்டியிருக்கின்றார். அந்தக் கல்வெட்டையும் நாங்கள் அங்கிருந்து எடுக்கவில்லை. கட்சி மாற்றமின்றி அந்தக் கல்வெட்டையும் அங்கு வைத்திருக்கின்றோம். ஒரு முறை கூட அந்த பணிமனைக்குச் சென்று ஆய்வு மேற்கொள்ளவில்லை. இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு பார்த்தால், நானாக இருந்தாலும் சரி, அந்தத் துறையின் அமைச்சர் மற்றும் முந்தைய அமைச்சர் அவர்களாக இருந்தாலும் சரி, கிட்டத்தட்ட 20-க்கும் மேற்பட்ட முறை அந்தப் பணிமனையில் ஆய்வு மேற்கொண்டிருக்கிறோம். இது ஒரு புறம்.

நேற்றைக்குக்கூட எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேட்டியிலே சொல்கிறபோது, போதிய வசதிகள் இல்லையென்று குறிப்பிட்டிருந்தார். போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் “வாருங்கள், அழைத்துச் சென்று காட்டலாம்” என்று கூறினார். இதில் ஒரு சிறிய ஒப்பீடை நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏற்கெனவே, கோயம்பேடு பேருந்து நிலையத்தில் இயங்கிக் கொண்டிருக்கிற பேருந்து நிலையத்தினுடைய மொத்தப் பரப்பளவு சுமார் 31 ஏக்கர். புதிதாக கட்டப்பட்டிருக்கின்ற கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தின் மொத்தப் பரப்பளவு சுமார் 86 ஏக்கர். இந்த 86 ஏக்கரில் முந்தைய அரசு சரியான திட்டமிடல் இல்லையென்ற காரணத்தால், பல்வேறு பணிகளை மேற்கொள்ள தவறிவிட்டது.

அப்படி அவர்கள் தவறிய பணிகள் கிட்டதட்ட 100 கோடி ரூபாய் அளவிற்கு கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். கோயம்பேடு பேருந்து நிலையம் என்பது 2002 ஆம் ஆண்டு திறக்கப்பட்டது. அந்தப் பேருந்து நிலையம் திறக்கப்பட்ட பிறகு 7 ஆண்டுகள் வரை, நாம் சென்னை வாசிகள் என்பதால் இதுகுறித்து நன்றாக அறிந்திருப்போம். பாரி முனை, சென்ட்ரல் இரயில் நிலையம், எழும்பூர் இரயில் நிலையம் போன்ற பகுதிகள் ஆம்னி பேருந்துகள் இயக்கத்தால் போக்குவரத்து முடங்கியது மக்கள் பெரியளவில் பாதிக்கப்பட்டிருந்தார்கள்.

கோயம்பேடு பேருந்து நிலையம், 2002 ஆம் ஆண்டு திறக்கப்பட்டாலும், 2009 ஆம் ஆண்டுதான், ஆம்னி பேருந்துகள் செல்கின்ற நிலை இருந்தது. குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், 7 ஆண்டுகள் கழித்துத்தான், கோயம்பேடு பேருந்து நிலையம் திறக்கப்பட்ட பிறகு மக்கள் பயன்பாட்டிற்கு வந்தது. ஆனால், இன்றைய திராவிட மாடல் அரசு கடந்த டிசம்பர் மாதம் 30 ஆம் தேதி, கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் திறக்கப்பட்டதில் இருந்து, இன்றைய தினம் வரை கணக்கிட்டால், சுமார் 45 நாட்களாகின்றன. இந்த 45 நாட்களில் 2,450 பேருந்துகள்



தினந்தோறும் இயக்கப்படுகின்ற ஒரு நிர்வாகத் திறனுடைய ஆட்சி இந்தத் திராவிட மாடல் ஆட்சி என்பதை நான் குறிப்பிட்டுக் கூற கடமைப்பட்டுள்ளேன். (மேசையை தட்டும் ஒலி)

கடந்த சனிக்கிழமை ஆய்வுக்கு சென்றிருந்தோம். அன்றைய தினம் மாத்திரம் பயணிகளின் எண்ணிக்கை 1,07,000 பேர். அன்றைய தினத்தில் பயணித்திருக்கிறார்கள். கோயம்பேடு பேருந்து நிலையத்தில் பேருந்து ஓட்டுநர்கள் அன்றைக்கு 2002 ஆம் ஆண்டு வந்த தலைப்பு செய்தியை சுட்டிக்காட்டு கின்றேன். பேருந்து ஓட்டுநர்கள் படுக்க இடம் இல்லாமல் பேருந்துகளுக்கு அடியில் படுத்து உறங்குகின்ற செய்தியை நான் கையிலே வைத்துக்கொண்டிருக்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டால் அவர்களுக்கும் தருகின்றேன். ஆனால் இன்றைய நிலை அப்படி அல்ல.

3 இடங்களில் 300-க்கும் மேற்பட்ட பேருந்து ஓட்டுநர்கள் தங்குவதற்குண்டான ஏற்பாடுகள் இந்த கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில் செய்யப்பட்டிருக்கின்றன. 3 உணவகங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. மருத்துவமனை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 47 கடைகள் செயல்பாட்டில் இருக்கின்றன. இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு, அங்கு புதிய பூங்கா 6 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டிருக்கிறது. 14 ஏக்கர் நிலப்பரப்பில் காலநிலை பூங்கா 11 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டிருக்கிறது. மழைக்காலத்தில் சிறிய மழைக்கே, பெரிய தண்ணீர் தேங்கி நிற்கின்ற சூழ்நிலை அறிந்து, 1700 மீட்டர் அளவிற்கு சுமார் 14 கோடி ரூபாய் செலவில் மழைநீர் கால்வாய் அமைக்கப்பட்டிருக்கிறது. நுழைவு வாயில்கூட இல்லாத நிலையிலிருந்த, அந்த பேருந்து நிலையத்திற்கு சுமார் 6 கோடி ரூபாய் செலவில் நுழைவு வாயில் அமைக்கப்பட்டிருக்கிறது. போக்குவரத்துக்காக, மாற்றுப் பாதைக்காக, Police Academy சாலை, நெடுமஞ்சேரி சாலை ஆகிய சாலைகளில் 8 கி.மீ. அளவுக்கு வனத் துறையினுடைய அனுமதியோடு, புதிய தார்ச்சாலைகள் போடப்பட்டிருக்கின்றன.

இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு tender கோரப்பட்டு, அந்தப் பணிகள் நிறைவுற்றிருக்கின்றன. அதேபோல், புதியதாக நடை மேம்பாலம் சுமார் 60 கோடி ரூபாய் அளவில் tender கோரப்பட்டிருக்கின்றன. அதேபோல், கிளாம்பாக்கத்திற்கென்று ஒரு இரயில் நிலையம் அமைப்பதற்கு ரூ.20 கோடி அளவில் இரயில்வே துறைக்கு ஒப்படைக்கப்பட்டு, இன்றைக்கு அந்தப் பணிகள் துவக்கப்பட்டு, 6 மாத காலத்தில் அப்பணிகள் நிறைவுறவிருக்கின்றன. நிரந்தரத் தீர்வாக metro rail அமைப்பதற்குண்டான திட்டங்களையும் தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டதன்பேரில், இன்றைக்கு அந்தப் பணிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

### சில ஊடகங்கள் திட்டமிட்டுப் பரப்பும் பொய்!

குறிப்பிட்டுக் கூற வேண்டுமென்றால், கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தைப் பொறுத்த வரையில், எதிர்க்கட்சித் தலைவருடைய நேற்றைய குற்றச்சாட்டுக்கு பதில் சொல்வதென்றால், இதுவரையில் பயணிகள் யாரும் கழிப்பறை இல்லை என்று புகார் சொல்லவில்லை, குடிநீர் வசதி இல்லையென்று புகார் சொல்லவில்லை, உணவு இல்லையென்று புகார் சொல்லவில்லை, குழந்தைகளுக்கு பால் இல்லையென்று புகார் சொல்லவில்லை. இந்த பேருந்து நிலையத்தைப் பொறுத்தளவில், இரவு நேரத்தில் 12 மணிக்கு மேல் 4 மணிக்குள்ளாக வருகின்ற பயணிகளுக்குண்டான பேருந்து வசதி இல்லை என்பதால், சில ஊடகங்களால் திட்டமிட்டு பரப்பப்படுகின்ற பிரச்சினையே தவிர, கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தைப் பொறுத்தளவில் நூறு சதவிகித பயன்பாட்டிற்கு இன்றைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றது.

அதோடு மட்டுமல்லாமல், கோயம்பேட்டிலே இயக்கப்பட்ட பேருந்து நிலையத்தில் பார்த்தால், பயணிகளுக்குண்டான சுமைகளைக் கொண்டு செல்வதற்கு அன்றைக்கு trolley-கள் இல்லை. இன்றைக்கு இந்த பேருந்து நிலையத்தில் trolley வசதி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. அதேபோல், நடக்க முடியாதவர்கள், வயது முதிர்ந்தவர்களுக்கு பேருந்தைப் பிடிப்பதற்கு, 200 மீட்டர் தூரம் செல்ல வேண்டியிருப்பதை அறிந்து, உடனடியாக 12 battery car-கள் வசதி அங்கே செய்யப்பட்டிருக்கிறது. நடைமேம்பால வசதிகள் செய்யப்பட்டுள்ளது. மின் தூக்கி வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

இவை அத்தனையும் இருந்தும், தூங்குபவர்களை எழுப்பலாம், தூங்குபவர்களைப் போல நடிப்பவர்களை எழுப்ப முடியாது. ஒரே ஒரு உறுத்தல், இந்த கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தைப் பொறுத்தளவில், எதிர்க்கட்சிகளுடைய சாடலுக்கு என்ன காரணம் என்று நான் நினைத்து, நினைத்துப் பார்த்தேன். ஆசியா கண்டத்திலேயே சிறப்பு வாய்ந்த பேருந்து நிலையம், அனைத்து நவீன வசதிகளுடன் கூடிய பேருந்து நிலையம். விமான நிலையம்கூட திறக்கப்படுகின்றது. ஆனால், 6 மாதம் அல்லது 1 வருடம் கழித்துதான் அந்த விமான நிலையம் செயல்பாட்டுக்கு வருகிறது.

### ஒட்டுமொத்த உறுத்தல்!

அண்மையிலேகூட, பாரதப் பிரதமர் அவர்கள், திருச்சியிலே விமான நிலையத்தை திறந்து வைத்தார். ஆனால் இதுவரையில் விமான நிலையம் முழுப் பயன்பாட்டிற்கு வரவில்லை. ஆனால், நம்முடைய திராவிட மாடல் ஆட்சியிலே, தமிழக முதல்வர் அவர்கள் சொல்வதைச் செய்வார், செய்வதைச் சொல்வார் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டாக இன்றைக்கு கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் அமைந்திருக்கின்றது. ஒட்டுமொத்த உறுத்தலை கணக்கிட்டுப் பார்த்தோம். என்னதான் இருக்கும்? இப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த ஒரு பேருந்து நிலையம் முதல் கட்டமாகத் துவக்கப்படுகின்றபோது, சிறுசிறு பிரச்சினைகள் இருப்பது இயல்பு. காலப் போக்கில் அவற்றைச் சரி செய்து விடலாம்.

### அவதூறுகள்!

ஆனால், இப்படி தொடர்ந்து புகார் கூறுகின்றார்களே என்று நான் சிந்தித்துப் பார்க்கின்றபொழுது, என்னுடைய சிந்தைக்கு வருவதெல்லாம் தலைவர் ‘கலைஞர் நூற்றாண்டு பேருந்து நிலையம்’ என்று பெயர் வைத்ததால்தான், இந்த அவதூறுகளைத் தொடர்ந்து, மனமில்லாதவர்கள் பரப்பி வருகின்றார்கள் என்பதை நான் இங்கே கோடிட்டுக் காட்டி, கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில் இன்னும் தேவைப்படுகின்ற அனைத்து அடிப்படை வசதிகளையும், நிறைவு செய்கின்ற வகையில் பல்வேறு மாற்றங்களை இந்த 45 நாட்களிலே கொண்டு வந்திருக்கின்றோம்.

வேண்டுமென்றால், சட்டமன்றத்திலே இருக்கின்ற அனைத்துக் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களும் வாருங்கள். நாங்கள் கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்திற்கு எதிர்கட்சித் தலைவர் உட்பட அனைவரையும் அழைத்து செல்கிறோம். மேலும், நீங்கள் என்னென்ன தேவை என்பதை கூறுங்கள். தமிழக முதல்வர் அவர்கள் கவனத்திற்கு கொண்டு சென்று, முழுமையாக உங்களுடைய தேவைகளை நிறைவேற்ற இந்த அரசு தயாராக இருக்கின்றது.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேசினார்.



மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் ஒன்றியம் திருவிடைக்கழி ஊராட்சியில் ஊராட்சி மன்ற அலுவலக கட்டிட திறப்பு விழாவில் கட்டிட வளாகத்தில் தென்னை மரக்கன்றுகளை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் நட்டுவைத்தார், உடன் மாவட்டக்கழக துணைச் செயலாளர் மு.ஞானவேலன், சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர் எம்.எம்.சித்திக், செம்பனார்கோயில் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் எம்.அப்துல்மாலிக், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர், ஒன்றியக் குழு துணைத்தலைவர் பி.பாஸ்கர், ஒன்றியக் குழு உறுப்பினர் ஜெயந்திகார்த்தி, ஊராட்சி மன்ற தலைவர் சங்கீதாநாகராஜன் மற்றும் பலர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.2.2024) சென்னை மாநகராட்சி முன்னாள் மேயர் சைதை துரைசாமி அவர்களின் இல்லத்திற்கு நேரில் சென்று இமாச்சலப் பிரதேசத்தில் நடந்த விபத்தில் உயிரிழந்த அவரது மகன் வெற்றி துரைசாமியின் உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஆகியோர் உள்ளனர்.

## அரசு பொதுத் தேர்வு எழுதப்போகும்

# மாணவ- மாணவிகளுக்கு வினா - விடை புத்தகம்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் தமது சொந்த செலவில் வழங்கினார்!

அரியலூர், பிப். 15-

அரியலூர் மாவட்டம் குன்னம் தொகுதி செந்துறை ஒன்றியத்தில் தமது சொந்த செலவில் தேர்வினை வெல்வோம் வினா விடை புத்தகங்களை 10, 11, 12 ம் வகுப்பு பொது தேர்வினை எதிர்கொள்ளும் மாணவ, மாணவியர்களுக்கு இலவசமாக தமிழ்நாடு அரசு போக்குவரத்து துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் வழங்கினார்.

அரியலூர் மாவட்டம் குன்னம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட செந்துறை ஒன்றிய பகுதியில் உள்ள பள்ளிகளில் உள்ள 467 மாணவ, மாணவிகளுக்கு 22 லட்சத்து 54 ஆயிரம் மதிப்பிலான விலையில்லா மிதிவண்டிகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சிவசங்கர் வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து செந்துறை அரசு ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப்பள்ளி,

ஆனந்தாவாடி, இரும்புலிகுறிச்சி, பரணம் மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் 10 11 12 ஆம் வகுப்பு அரசு தேர்வினை எதிர்கொள்ளும் மாணவ, மாணவிகளுக்கு தேர்வில் தங்கு தடை இன்றி அதிக மதிப்பெண் பெறும் வகையில் தேர்வினை வெல்வோம் என்ற வினா விடை புத்தகத்தை தனது சொந்த செலவில் இலவசமாக வழங்கினார்.

தேர்வினை வெல்வோம் என்ற புத்தகம் பொது தேர்வினை எளிதில் எதிர்கொள்ளும் வகையில் கல்வித் துறையில் அனுபவம் வாய்ந்த அரசு பள்ளி ஆசிரியர்களால் உருவாக்கப்பட்ட அனைத்து பாட பிரிவுகளிலும் மிக முக்கியமான வினா விடைகள் அடங்கியது.

இதனை பெற்றுக் கொண்ட மாணவ, மாணவிகள் வழங்கிய போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அவர்களுக்கு தங்கள் நன்றியினை தெரிவித்துக் கொண்டனர்.

தனது சொந்த தொகுதியான குன்னம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள அனைத்து மேல்நிலைப் பள்ளிகளிலும் பொதுத் தேர்வினை சந்திக்க உள்ள மாணவ, மாணவியர்களுக்கு இதுவரை சுமமார் 9 ஆயிரம் எண்ணிக்கையில் “தேர்வை வெல்வோம்” வினா விடை அடங்கிய புத்தகங்களை வழங்கிய அமைச்சர் சிவசங்கர் அவர்களுக்கு பள்ளி ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள், பெற்றோர்கள், பொதுமக்கள் அனைவரும் தங்களது பாராட்டையும், நன்றியையும் தெரிவித்தனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் ஜா.ஆனி மேரி ஸ்வர்னா, கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் ச.அ. பெருநற்கிள்ளி, ஒன்றியச் செயலாளர்கள் பூ.செல்வராஜ், வி.எழில் மாறன், மாவட்டப் பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன் மற்றும் மாவட்ட, ஒன்றியக் கழக நிர்வாகிகள், கழகத் தோழர்கள் பலரும், கலந்து கொண்டனர்.

## திருத்தணி தொகுதி – இரா.கி.பேட்டை வட்டத்தில்

# பொன்னை ஆற்றிலிருந்து கூட்டுக் குடிநீர்த் திட்டம்!

## சட்டப்பேரவையில் – திருத்தணி எஸ்.சந்திரன் வலியுறுத்தல்!

சென்னை, பிப்.15- சட்டப்பேரவையில், நேற்று முன்தினம் கேள்வி நேரத்தின் போது இது குறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**எஸ்.சந்திரன் :** திருத்தணி தொகுதி, இரா.கி. பேட்டை வட்டத்திற்கு பொன்னை ஆற்றிலிருந்து கூட்டுக்குடிநீர் திட்டத்தைச் செயல்படுத்த அரசு முன்வருமா?

**அமைச்சர் கே.என். நேரு :** திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தொகுதியில் இரா.கி.பேட்டை ஒன்றியத்தைச் சார்ந்த 38 ஊராட்சிகளில் 287 குடியிருப்புகள் உள்ளன. திருத்தணி மற்றும் இரா.கி. பேட்டை ஊராட்சி ஒன்றியங்களில் அடங்கிய 9 ஊராட்சிகளில் உள்ள செருக்கனூர் மற்றும் 114 ஊரகக் குடியிருப்புகளுக்கு, பொன்னை ஆற்றிலிருந்து குடிநீர் வழங்க விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு நீர் ஆதாரம் இல்லாததால் கொசஸ்தலை ஆற்றிலிருந்து குடிநீர் வழங்க உத்தேசிக்கப்பட்டு, ரூ.44.58 கோடி மதிப்பீட்டில் உயிர் நீர் இயக்கத்தின் (ஜல் ஜீவன் இயக்கம்) கீழ் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகள் தொடங்கப்பட்டு இது வரை 15 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. நவம்பர் 2024ல் அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டுக் கொண்டுவர இலக்கிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்மூலம் 53,630 மக்கள் பயன்பெறும் வகையில் நாளொன்றுக்கு 2.95 MLD குடிநீர் வழங்க வடிவமைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில், திருத்தணி தொகுதி இரா. கி.பேட்டை ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்த 4 ஊராட்சிகளிலுள்ள இரா. கி.பேட்டை, வங்கனூர், ஐ.சி.எஸ்.கண்டிகை மற்றும் எஸ்.வி.ஜி.புரம் 57 குடியிருப்புகளுக்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் வீதம் குடிநீர் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள 34 ஊராட்சியில் உள்ள 200 குடியிருப்புகளுக்கு ஊரக வளர்ச்சி முகமை மூலம் தனி குடிநீர் திட்டம் செயல்படுத்தப்பட்டு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**எஸ்.சந்திரன் :** இந்தத் திட்டத்தினைப் சிறப்பாக நிறைவேற்றிக் கொடுத்திருக்கக்கூடிய தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய சட்டமன்றத் தொகுதியின் மக்க



ளின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் நடப்புத் திட்டத்திலே மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளும், நிலத்தடி நீர்த்தேக்கத் தொட்டிகளும் எண்ணிக்கை 47 செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இருப்பினும் சில இடங்களிலே இருக்கக் கூடிய குடிநீர் இணைப்பினை பயன்படுத்தி அந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றது. கூடுதலாக சில இடங்களிலே pipeline விஸ்தரிப்பு தேவைப்படுவதால் அதனை அமைத்துத்தர அமைச்சர் அவர்கள் முன் வருவாரா?

**அமைச்சர் கே.என். நேரு :** ஒரு குடிநீர்த் திட்டம் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, எந்த இடத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட வேண்டும் என்பதை முடிவு செய்திருப்பார்கள். நகரங்கள் என்கிற காரணத்தால் நாள்தோறும் விரிவடைகின்ற காரணத்தால் தேவைப்படுகின்ற இடங்களிலே பின்னாளில் அந்த இடத்தில் தொட்டி கட்டப்படும் என்பது ஏற்கெனவே, அறிவிக்கப்பட்டிருக்கிறது. தரையிலே கட்டி sump ஆக இருந்தாலும், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியாக இருந்தாலும் தேவைப்படுகின்ற போது அதைக் கட்டி அனைத்து மக்களுக்கும் சீராக குடிநீர் விநியோகம் என்ற வகையிலேதான் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும்.

**எஸ்.சந்திரன் :** மீண்டும் ஒருறை நன்றி தெரிவித்துக்கொள்வதுடன் இந்தத் திட்டத்தின்கீழ் அருகாமையிலே இருக்கக்கூடிய ஒருசில கிராமங்கள் விடுபட்டுப் போய் இருக்கின்றன. அம்மையார்குப்பம், ஆதிவராகபுரம், கே.ஜி. கண்டிகை உள்ளிட்ட கிராமங்கள். அதனை இந்தத் திட்டத்திலே சேர்த்துத் தர அமைச்சர் அவர்கள் முன்வருவாரா?

**அமைச்சர் கே.என். நேரு :** உறுப்பினர் அவர்கள் எழுத்துப்பூர்வமாக எழுதித் தந்தால் அதிகாரிகளிடம் சொல்லி ஆய்வு செய்து அதை எப்படி இணைக்க முடியும் என்பதைக் கண்டறிந்து இணைக்கலாம்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.